தஞ்சை ராமமூர்த்தி காலமானார்

தஞ்சாவூர், நவ. 12: மூத்த அரசியல்வாதியும், எழுத்தாளரும், வழக்குரைஞருமான தஞ்சை அ. ராமமூர்த்தி (87) உடல்நலக் குறைவு காரணமாக சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்தார்.

தஞ்சையார் என அனைவராலும் அழைக்கப்படும் இவர் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் 1934, நவம்பர் 23-ஆம் தேதி பிறந்தார். இளமைக்காலம் முதல் சமூகச் சிந்தனையாளராக இருந்த இவர் 1961-ஆம் ஆண்டில் காமராஜர் தலைமையிலான காங்கிரசில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

காமராஜர், இந்திரா காந்தி போன்றவர்களுடன் இணைந்து பணியாற்றியவர், அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினராக இருந்தார். பின்னர், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி காமராஜ் காங்கிரஸ், ஜனதா தளம் போன்றவற்றிலும் பணியாற்றியவர். சோஷலிச அரங்கில் சந்திரசேகரோடு இணைந்து இளம் துருக்கியர் குழுவில் அகில இந்திய பொறுப்பேற்றும் செயல்பட்டார். வி.பி. சிங், பழ. நெடுமாறன் போன்றோருடன் நெருங்கிப் பழகியவர். நான்கு முறை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இந்திய சோவியத் நட்புறவுக் கழகம், உலக சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் போன்ற அமைப்புகளில் இணைந்து பல ஆண்டுகளாகப் பணியாற்றினார்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் இருந்த இவர் விலகி சமூக மற்றும் தமிழ்ப் பணியில் ஈடுபட்டு வந்தார். தமிழ் அமைப்புகளில் முழு வீச்சில் செயல்பட்டு பல்வேறு இயக்கங்களில் கலந்து கொண்டார். விவேகானந்தர், புத்தர் உள்ளிட்டோர் பற்றி ஆய்வு செய்து நூல்கள் வெளியிட்டார்.

இவருக்கு மனைவி சரஸ்வதி, மகள் அம்மு, மகன் அப்பு உள்ளனர். ராமமூர்த்தியின் உடல் தஞ்சாவூர் சீனிவாசபுரம் கிரி சாலையிலுள்ள அவரது இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டு, சனிக்கிழமை காலை 10 மணியளவில் இறுதிச் சடங்கு நடத்தப்படவுள்ளது.

இரங்கல்

கே.எஸ்.அழகிரி: கம்பீரமான முறையில் அற்புதமாகப் பேசக் கூடிய ஆற்றலும், வாதத் திறமையும் மிக்கவர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், சமூக ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுக்கக் கூடிய தஞ்சை ராமமூர்த்தியின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

டிடிவி தினகரன்: காமராஜர் உள்ளிட்ட தலைவர்களோடு பழகி அவர் ஆற்றிய பொது வாழ்வுப் பணிகளும், சமய சார்பின்மை குறித்து செய்த ஆய்வுகளும் ராமமூர்த்தியின் பெயரை எப்போதும் நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

சு.திருநாவுக்கரசர் (காங்கிரஸ்): காமராஜர் அன்புக்கு பாத்திரமாக திகழ்ந்தவரும் தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் பொதுக்கூட்டங்களில் போராட்டங்களில் காங்கிரஸ் இயக்கம் வளர தொடர்ந்து பாடுபட்டவருமான தஞ்சை அ.ராமமூர்த்தி மறைவு செய்தி கேட்டு வருத்தமுற்றேன். அவர் மறைவு காங்கிரஸ் இயக்கத்துக்கு பேரிழப்பு.

மழை–வெள்ள பாதிப்பு

சென்னை புறநகர்ப் பகுதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சென்னை, பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை வெள்ளிக்கிழமை ஆய்வு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர்.

சென்னை, நவ. 12: மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை புறநகரின் பல்வேறு பகுதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார். செங்கல்பட்டு மாவட்டம் பள்ளிக்கரணை ரேடியல் சாலை நாராயணபுரம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

பள்ளிக்கரணைக்குப் பிறகு, மாம்பாக்கம் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், வண்டலூர் வட்டத்துக்கு உள்பட்ட கிராமங்களில் வசிக்கும் இருளர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 33 குடும்பங்களுக்கு கீழக் கோட்டையூர் கிராமத்தில் உள்ள நிலத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை அளித்தார்.

பின்னர், பலத்த மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சிறுவர்கள் உள்பட பல்வேறு தரப்பினருடன் அவர் பேசினார். அப்போது அவருடன், இளைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு பொது மக்களும் தங்களது கைப்பேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இதன்பின், காஞ்சிபுரம் ஆதனூர், அடையாறு ஆறு துவங்கும் இடம், மண்ணிவாக்கம், அடையாறு ஆற்று பாலத்தில் பலத்த மழையால் ஏற்பட்டுள்ள நீர் வரத்து ஆகியவற்றையும் முதல்வர் பார்வையிட்டார்.

முடிச்சூரில் உணவு–பொருள்கள்: மழை வெள்ளம் அதிகளவு பாதித்த பகுதிகளில் ஒன்றான முடிச்சூரிலும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். அங்குள்ள சி.எஸ்.ஐ., செயின்ட் பால்ஸ் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம் மற்றும் மருத்துவ முகாமைப் பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், முடிச்சூர் டோல்கேட் அருகில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, முடிச்சூர் மதனபுரத்தில் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரில் இறங்கி வெள்ளநீரை அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தாம்பரம் பேருந்து நிலையம்: ஆறாம் நாள் ஆய்வுப் பணியின் இறுதியாக, தாம்பரம் பேருந்து நிலையத்தில் பலத்த மழையால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வின் போது, அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மழை வெள்ளத் தடுப்புப் பணி கண்காணிப்பு அதிகாரிகள் கே.கோபால், பி.அமுதா, செங்கல்பட்டு ஆட்சியர் ராகுல் நாத், காஞ்சிபுரம் ஆட்சியர் மா.ஆர்த்தி உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

இன்றும், நாளையும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி சிறப்பு முகாம்

சென்னை, நவ. 12: வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் சிறப்பு முகாம்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள வாக்குச் சாவடி அமைவிடங்களில் இந்த முகாம்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதியன்று 18 வயது நிறைவடையும் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கலாம். இதற்கான திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளுக்காக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலகங்கள், தேர்தல் துறையின் இணையதளம் ஆகியவற்றின் மூலமாக வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு, நீக்கல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், நவம்பர் மாதத்தில் நான்கு சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (நவம்பர் 13, 14) சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. தேர்தலின்போது வாக்களிப்பதற்காக எங்கெல்லாம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்ததோ அந்த இடங்கள் அனைத்திலும் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

சென்னையில்...: சென்னையில் ஏற்பட்ட தொடர் மழையின் காரணமாக பல்வேறு இடங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதாலும், பொதுமக்கள், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு சிறப்பு முகாம்களில் பங்கேற்பதில் சிரமம் ஏற்படும் சூழ்நிலை இருப்பதாலும், பொதுமக்களின் நலன் கருதி, சென்னையின் 16 சட்டப்பேரவைத் தொகுதி வாக்குச்சாவடிகளில் நவ.13, 14 ஆகிய தேதிகளில் நடைபெற இருந்த முகாம்கள் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

ஓரிரு நாள்களில் சென்னை நகரம் சீர் செய்யப்படும்: அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

சென்னை, நவ. 12: மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மாநகரம் ஓரிரு நாள்களில் சீர் செய்யப்படும் என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சென்னை எழிலகத்தில் உள்ள பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் அதிகாரிகளுடன் வெள்ளிக்கிழமை அவர் ஆலோசனை நடத்தினார். இந்த ஆய்வுக் கூட்டத்துக்குப் பிறகு, செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், கரையைக் கடந்துள்ளதால் ஓரளவுக்கு மழை நின்றுள்ளது. சென்னையில் எங்கெல்லாம் மழை நீர் தேங்கியுள்ளதோ அங்கெல்லாம் மோட்டார்களைக் கொண்டு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. சென்னை நகரத்தில் மட்டும் 44 நிவாரண முகாம்களில் 2,699 பேர் தங்க வைத்து அவர்களுக்கு உணவு அளித்து வருகிறோம். தமிழகம் முழுவதும் 259 முகாம்களில் 14 ஆயிரத்து 135 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரே நாளில் மிகப் பெரிய அளவில் எதிர்பாராத மழை பெய்தது. 2015 நிகழ்வுடன் ஒப்பிடும் போது இப்போது உயிர் மற்றும் பொருள் சேதங்கள் குறைவாகவே ஏற்பட்டுள்ளன. 2015-ஆம் ஆண்டில் 177 பேர் இறந்தனர். இரவில் யாருக்கும் சொல்லாமல் தண்ணீர் திறந்ததால் அதிக மானோர் உயிரிழந்தனர். 4 முதல் 5 தினங்களில் மட்டும் தமிழகம் முழுவதும் மழை காரணமாக 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

2015-இல் 2,211 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இப்போது 834 கால்நடைகள் இறந்துள்ளன. அப்போது 31,451 குடிசைகள் சேதம் அடைந்தன. இப்போது 2,284 சேதம் அடைந்துள்ளன. உயிரிழப்பு, சேதங்கள் குறைந்ததற்கு முதல்வரின் ஒரு மாத உழைப்பே காரணம்.

சனிக்கிழமைக்குள் (நவ.13) சென்னை மாநகரம் சீர் செய்யப்படும். அமைச்சர்கள் பயிர்ச் சேதங்களை ஆய்வு செய்து வருகின்றனர். 33 சதவீதத்துக்கு மேல் உள்ள பயிர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும்.

அமைச்சர்கள் களத்தில் இறங்கி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 2015-ஆம் ஆண்டு படிப்பினையை அதிமுக அரசு சரிவரச் செய்யவில்லை. இப்போது ஏற்பட்ட மழை வெள்ளமும் எங்களுக்கு அனுபவ ரீதியான பாடம்தான் என அமைச்சர் ராமச்சந்திரன் கூறினார்.

முன்னாள் டிஜிபிக்கு எதிரான வழக்கில் பெண் எஸ்.பி. 2-ஆம் நாளாக சாட்சியம்

விழுப்புரம், நவ.12: முன்னாள் டிஜிபிக்கு எதிரான பாலியல் தொந்தரவு வழக்கில், பாதிக்கப்பட்ட பெண் எஸ்.பி. விழுப்புரம் நீதிமன்றத்தில் இரண்டாம் நாளாக வெள்ளிக்கிழமையன்றும் நேரில் ஆஜராகி சாட்சியம் அளித்தார்.

பெண் ஐபிஎஸ் அதிகாரிக்கு (எஸ்.பி.) பாலியல் தொந்தரவு கொடுத்ததாக முன்னாள் சிறப்பு டிஜிபி மீதும், பெண் எஸ்.பி.யின் வாகனத்தைத் தடுத்ததாக முன்னாள் எஸ்.பி. மீதும் விழுப்புரம் சிபிசிஐடி போலீஸார் விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கில் 400 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து, சாட்சிகளிடம் விசாரணை வியாழக்கிழமை முதல் தொடங்கியது. முதல் நாளன்று, பாதிக்கப்பட்ட பெண் எஸ்.பி. நேரில் சாட்சியம் அளித்தார்.

இந்த வழக்கு வெள்ளிக்கிழமை விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி கோபிநாதன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, முன்னாள் சிறப்பு டிஜிபி, முன்னாள் எஸ்.பி. ஆகியோர் ஆஜராகவில்லை. பிரதான சாட்சியான பெண் எஸ்.பி. 2-ஆவது நாளாக நேரில் ஆஜரானார். கதவுகள் அடைக்கப்பட்ட நிலையில், அவர் நீதிபதி முன் 6 மணி நேரத்துக்கு மேல் சாட்சியம் அளித்தார். இதையடுத்து, விசாரணையை வருகிற 15-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை முன்பாக

வேலு நாம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸன் ரோடு, சென்னை-600006

O.A.எண்.169/2020

பேங்க் ஆஃப் இந்தியா, கோடம்பாக்கம் கிளை, (IFSC குறியீடு எண். BKID0008014), எண்.25, இரண்டாவது குறுக்குத் தெரு, டிரண்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-600 024, சார்பில் அதன் கான்ஸ்ட்டிடியூடெட் அட்டர்னி. ...வாதி

எதிர்

1) **M/s.சென்பூல் செராமிக்ஸ்,** பதிவு செய்யப்பட்ட பங்குதாரர் நிறுவனம்.PAN எண். AAHFC7767M, சார்பில் பங்குதாரர்கள்: (i)திரு.B.விஜய் ஆனந்த், (ii)திருமதி.B.வைதேகி, ஜெயின் அந்தரிக்ஷா, A-பிளாக், 2A, 2வது தளம்,கதவு எண்.12, ரத்தினம்மாள் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600024.

2)திரு.B.விஜய் ஆனந்த், த/பெ. திரு.பால்கரன், வயது:43, PAN எண். AHNPB6164E, ஜெயின் அந்தரிக்ஷா, A2B, எண்.12, ரத்தினம்மாள் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600024.

3)திருமதி.B.வைதேகி, க/பெ. திரு.பால்கரன், வயது:66, PAN எண். AHNPB6162C, ஜெயின் அந்தரிக்ஷா, A2B, எண்.12, ரத்தினம்மாள் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600024. ...பிரதிவாதிகள்

வாதியானவர் மேலே பெயர் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு எதிராக, மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம்-II-ல் மனு ஒன்றை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்பதை அறியவும்.

எனவே, பிரதிவாதியாகிய உங்களுக்கு சாதாரண தபாலில் அனுப்பிய அறிவிப்பு/சம்மனுக்கு சரியான நடவடிக்கை இல்லாத காரணத்தினால் தீர்ப்பாயம் ஆனது மாற்று சேவையாக நாளிதழில் பிரசுரிக்குமாறு உத்தரவிட்டதால் இந்த அறிவிப்பானது வெளியிடப்படுகிறது.

இதன்படி நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில் தீர்ப்பாயம் முன்னால் 10.12.2021 அன்று காலை 11.00 மணி அளவில் நேரிலோ அல்லது தங்களின் வழக்கறிஞர்கள் மூலமாக ஆஜராகி தங்களது தரப்பு வாதத்தினை எடுத்துரைக்கலாம் என இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது தவறினால் நீங்கள் இல்லாத நிலையில் விசாரிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

S.R.கதன்ராஜ்
வாதி வழக்கறிஞர்

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி

இண்டியன் பேங்க் Indian Bank
இலாஹாபாத் ALLAHABAD

ZONAL OFFICE, POONAMALLEE
No.55, 2nd Floor, Wellington Estate Building, Ethiraj Salai, Chennai - 600 008.
Phone : 044 - 28252147
email : zopoonamallee@indianbank.co.in

Notice Inviting Tenders for Leasing of Office Premises

Indian Bank, Zonal Office, Poonamallee invites sealed offers from owners willing to offer on **long lease** office premises (ready built / under construction) located in ground floor at the following centre for their branch alongwith on-site ATM with sufficient parking space. The minimum expected lease period is 15 years.

MOGAPPAIR Branch
- 1800 Sqft carpet only
(including onsite E-Lounge)

The tender forms can be downloaded from our website http://www.indianbank.in/tender.php

Tenders are to be submitted in two cover system consisting of Technical and Financial bid in two separate covers placed into one single cover, superscribed **"BID FOR OFFER OF LEASE FOR MOGAPPAIR (location) BRANCH PREMISES"** and submitted to Deputy General Manager / Zonal Manager, at the above mentioned address with refundable EMD of Rs.5000/- and Rs.250/- (Non Refundable for downloading Tender Documents) by way of DD favouring: Indian Bank, Zonal Office, Poonamallee, on or before **2.00 p.m.** on **29.11.2021.** EMD of Rs.5000/- and Tender Documents of Rs.250/- are to be submitted along with Technical Bid.

Date of opening technical bid : **2.30 p.m.** on **29.11.2021.**

Incomplete tenders / late tenders / tenders not accompanied by requisite EMD / tenders not in the form specified are liable to be rejected. Priority will be given to tenders from Public Sector Undertaking / Govt. Organisations.

The Bank reserves the right to reject any application without assigning any reasons whatsoever. Tenders from agents / brokers will not be accepted.

DGM / ZONAL MANAGER

பாரத ஸ்டேட் வங்கி
தனி நபர் கடன் மத்திய செயல்பாட்டு மையம்

RACPC - OMR கிளை சென்னை
புதிய எண்.4/952 & 4/952A, 3வது தளம், ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி, சென்னை - 600 096, போன் :

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு

கடன்தாரர் 1 : திரு.மொஹமத் அலியார் (விண்ணப்பதாரர்), த/பெ.திரு.நைனா மொஹமத், புதிய எண். 44, பழைய எண். 103-A, விநாயகபுரம் முதல் தெரு, அரும்பாக்கம், சென்னை - 600 106. **அலுவலக முகவரி : திரு.மொஹமத் அலியார் த/பெ.திரு.நைனா மொஹமத்,** Finger Print எண். 53-A, விநாயகபுரம் முதல் தெரு, 100 அடி சாலை, MMDA சிக்னல் அருகில், அரும்பாக்கம், சென்னை - 600 106. **சொத்தின் முகவரி : திரு.மொஹமத் அலியார் த/பெ.திரு.நைனா மொஹமத்,** ப்ளாட் எண். 1410, 14-வது தளம், ஜாஸ்மின் டைப் , மார்பிள் பிளாக், ஆர்சிட் ஸ்பிரிங்ஸ், மனை எண். 54, வாட்டர் கெனால் சாலை, கெரட்டூர், சென்னை - 600 080.

தங்களது வேண்டுகோலின் படி ரூ.56,00,000/- அளவிலான வீட்டு கால கடன் (கணக்கு எண். 37475752810) மற்றும் சுரக்ஷர் (கணக்கு எண். 40020887454) வசதியை அவ்வப்போது வங்கியின் பெயரில் பல்வேறு சொத்துக்களை அடமானம் செய்யப்பட்டு நிதி உதவியாக பல்வேறு கடன்களை எங்களது **PBB இந்திரா நகர் கிளை** வழங்கியது. **17.10.2021** அன்று வரை உள்ள பாக்கித்தொகை **ரூ.53,12,061/-** (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுபத்து ஒன்று மட்டும்) **மேலும் 18.10.2021** முதல் பின்வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு மேற்படி சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அட்டவனை சொத்துக்கள்

அட்டவனை A: வகை எண். 1 : மத்திய சென்னை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட அம்பத்தூர் தாலுகா, கெரட்டூர் கிராமத்தில், பட்டா எண். 7879 (RPT எண். 9404/06-07, T.K. 8A/1873/1415, RPT எண். 181, 182 / 06 -17 & RPT எண். 444 / 445/ 06-07). சர்வே எண். 514A/1, 514A/2, 537/A, 538, 538/1, 541, 542, 545, 546, 561, 589, 590, 591, 592/1, 2, 3, 594/2 -ன் படி "ஆர்சிட் ஸ்பிரிங்ஸ்" -ல் உள்ள 13 ஏக்கர் 89 சென்ட் நிலங்கள். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **வகை எண். 2 :** மத்திய சென்னை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட அம்பத்தூர் தாலுகா, கெரட்டூர் கிராமத்தில், பட்டா எண். 1076 & 903, சர்வே எண். 536/B-ன் படி மனை எண். 1-ல் 10,072 சதுர அடி (22 சென்ட்), சர்வே எண். 539-ன் படி மனை எண். 2-ல் 05 சென்ட் மற்றும் சர்வே எண். 540-ன் படி மனை எண். 3-ல் 1 ஏக்கர் 30 சென்ட் நிலங்கள் சேர்த்து மொத்தப்பரப்பளவு 1 ஏக்கர் 57 சென்ட் நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும்.

வகை எண். 1 மற்றும் 2 சேர்த்து மொத்தப்பரப்பளவு 62,563.81 சதுர மீட்டர். **எல்லைகள் : வடக்கில் :** காலி நிலம், தெற்கில் : காலி நிலம், கிழக்கில் : வாட்டர் கெனால் சாலை, மேற்கில் : ஏரி. **அட்டவனை B:** மத்திய சென்னை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட அம்பத்தூர் தாலுகா, கெரட்டூர் கிராமத்தில், வாட்டர் கெனால் சாலை என்ற முகவரியில் சர்வே எண். 514A/1, 514A/2, 537/A, 538, 538/1, 541, 542, 545, 546,561, 589, 590, 591, 592/1, 2, 3, 594/2 -ன் படி 13 ஏக்கர் 89 சென்ட், மனை எண்கள் : 1, 2 , மற்றும் 3-ல் சர்வே எண். 536/B-ன் படி 10,072 சதுர அடி (22 சென்ட்), சர்வே எண். 539-ன் படி 05 சென்ட் மற்றும் சர்வே எண். 540-ன் படி 1 ஏக்கர் 30 சென்ட். OSR -க்கான பரப்பளவு 9836.58 சதுர மீட்டர் தவிர மொத்தப்பரப்பளவு 52,727.23 சதுர மீட்டர் நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **அட்டவனை C:** அட்டவனை B-ல் குறிப்பிட்டுள்ள நிலத்தில் 215.08 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு உரிமை உள்ள நிலம். **அட்டவனை D:** குடியிருப்பு யூனிட் / அப்பார்ட்மெண்ட்: அட்டவனை A-ல் குறிப்பிட்டுள்ள சொத்தில் உருவாக்கப்பட்ட "ஆர்சிட் ஸ்பிரிங்ஸ்" என்ற பெயர் கொண்ட திட்டத்தில் மார்பிள் டவர்-ல் ஜாஸ்மின் டைப், 14-வது தளத்தில் 1132 சதுர அடி சூப்பர் பில்ட் ஏரியா கொண்ட அப்பார்ட்மெண்ட் எண். 1410 மற்றும் அதனுடன் கூடிய ஒரு கார் பார்க்கிங். இந்த சொத்து மத்திய சென்னை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

சொத்தின் முகவரி : ப்ளாட் எண். 1410, 14-வது தளம், ஜாஸ்மின் டைப் , மார்பிள் பிளாக், ஆர்சிட் ஸ்பிரிங்ஸ், மனை எண். 54, வாட்டர் கெனால் சாலை, கெரட்டூர், சென்னை - 600 080.

கடன்தாரர் 2 : திரு.K.R.சேதுபதி (விண்ணப்பதாரர்), த/பெ.திரு.K.கருப்பசாமி, எண்.8, VGV நகர், கண்ணபாளையம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, ஆவடி, சென்னை - 600 071. **அலுவலக முகவரி : திரு.K.R.சேதுபதி (விண்ணப்பதாரர்), த/பெ.திரு.K.கருப்பசாமி,** எண்.8, VGV நகர், கண்ணபாளையம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, ஆவடி, சென்னை - 600 071. **சொத்தின் முகவரி : திரு.K.R.சேதுபதி (விண்ணப்பதாரர்), த/பெ.திரு.K.கருப்பசாமி,** மனை எண். 20, GPR நகர், கண்ணபாளையம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600 077.

தங்களது வேண்டுகோலின் படி ரூ.23,58,000/- அளவிலான வீட்டு கால கடன் (கணக்கு எண். 36495361896) மற்றும் கார் லோன் (கணக்கு எண். 37027538127) மற்றும் MSME- CC (கடன் கணக்கு எண். 36500365365) வசதியை அவ்வப்போது வங்கியின் பெயரில் பல்வேறு சொத்துக்களை அடமானம் செய்யப்பட்டு நிதி உதவியாக பல்வேறு கடன்களை எங்களது **ஓக்கியம் துரைபாக்கம் கிளை** வழங்கியது. **17.10.2021** அன்று வரை உள்ள பாக்கித்தொகை **ரூ.36,78,692/-** (ரூபாய் முப்பத்து ஆறு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்) **மேலும் 18.10.2021** முதல் பின்வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு மேற்படி சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அட்டவனை சொத்துக்கள்

அட்டவனை A: தென் சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, கிராம எண். 7, கண்ணபாளையம் கிராமம், 08.12.2016 தேதியிட்ட P.P.D / L.O.எண். 123/2006-ன் படி CMDA அங்கீகாரம் பெற்ற "G.P.R நகர்" மனை பிரிவில் சர்வே எண். 315, பட்டா எண். 62, பட்டாவின் படி புதிய சர்வே எண். 315/1-ன் படி மனை எண். 20-ல் உள்ள 2680 சதுர அடி காலி மனை. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். **எல்லைகள் :** வடக்கில் : 70 அடி சாலை, தெற்கில் : மனை எண்கள் : 18 பகுதி & 22 பகுதி, கிழக்கில் : மனை எண். 21, மேற்கில் : மனை எண். 19. **அளவுகள் :** வடக்கில் : 40 அடி 3 அங்குலம், தெற்கில் : 40 அடி, கிழக்கில் : 68 அடி, மேற்கில் : 66 அடி சேர்த்து மொத்தப்பரப்பளவு 2680 சதுர அடி காலி மனை.

சொத்தின் முகவரி : மனை எண். 20, GPR நகர், கண்ணபாளையம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600 077.

2. நீங்கள் வங்கிக்கு திருப்பி செலுத்த வேண்டிய கடனை முறையாக செலுத்த தவறி விட்டபடியால் இந்திய ரிசர்வ் வங்கியின் விதிகளின் படி உங்களின் கடன் கணக்குகள் வாரா கடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. மேற்கூறிய காரணங்களுக்காக மேற்படி சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் உங்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்டுள்ள கடன் பாக்கிகளையும் மற்றும் ஒப்பந்த வட்டி மற்றும் இதர செலவுகளை சேர்த்து கடன் முழுமையாக செலுத்தும் படி கோரப்படுகிறது. தவறினால், மேற்படி சட்டம் 2002, பிரிவு 13-ன் படி கடனுக்கு ஈடான அடமான சொத்து மீது வங்கிக்கு இருக்கும் அனைத்து உரிமைகளை வங்கி பயன்படுத்தும் என்பதுடன் அதனால் விளையும் கஷ்ட நஷ்டங்கள் மற்றும் விரையங்களுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.

4. மேற்படி சட்டம் 13 (13)-ன் படி இந்த அடமான சொத்துக்களை விற்கவோ, குத்தகை அல்லது இதர வகையிலோ உரிமை மாற்றித்தர நீங்கள் தடை செய்யப்படுகிறீர்கள்.

இடம் : சென்னை **அதிகாரபூர்வ அதிகாரி**
தேதி : 10.11.2021 பாரத ஸ்டேட் வங்கி, RACPC - OMR கிளை சென்னை.

ASHOK LEYLAND
உங்கள் வெற்றி, எங்கள் வெற்றி

அசோக் லேலண்ட் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம் : நெ.1, சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை - 600 032; போன் : +91 44 2220 6000, பேக்ஸ் : +91 44 2220 6001;
CIN : L34101TN1948PLC000105; இணையதளம் : www.ashokleyland.com; மின்னஞ்சல் : secretarial@ashokleyland.com

**செப்டம்பர் 30, 2021 உட